சுருக்கம்

பணியமைப்பு – பொறியியல் பிரிவு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2013–2014ஆம் ஆண்டு கண்காணிப்புப் பொறியாளர் நிலை அலுவலர் தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் மற்றும் ஒரு அலுவலருக்கு பதவி உயர்வு அளித்து பணிநியமனம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (2டி) எண்.18 நாள் : 09.05.2014

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.15, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 25.01.2000.
2. அரசாணை (ப) எண்.504, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 10.10.2013.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண். 38120/2013/இஇ1, நாள் 13.09.2013, 26.09.2013 மற்றும் 07.10.2013.

*****

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிட்ட தற்காலிக பணி விதிகளின்படி (Adhoc Rules) கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான நியமனம் செயற்பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் அளிக்கப்படவேண்டும். மேலும் மேற்கண்ட தற்காலிக பணி விதிகளில் பொறியியல் பிரிவில் கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்திற்கு பணியமர்த்தப்படும் நபர் பொறியியல் பட்டம் (சிவில்) அல்லது இந்திய பொறியாளர்கள் நிறுவனம் நடத்தும் பிரிவு ஏ மற்றும் பி தேர்வில் (AMIE) தேர்ச்சி மற்றும் செயற்பொறியாளர் பதவியில் குறைந்தது 3 ஆண்டுகள் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2013–2014ம் ஆண்டுக்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான காலிப்பணியிட மதிப்பீடு ‘ஒன்று’ என நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடும் பொருட்டு கீழ்காணும் செயற்பொறியாளர்களின் பெயர்களை பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பியுள்ளார்.

(1) திரு.எ.குற்றாலிங்கம், செயற்பொறியாளர், மாவட்ட சுனாமி திட்ட செயலாக்க அலகு, இராமநாதபுரம் மாவட்டம்.

(2) திரு.எஸ்.ஆறுமுகம், செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர் மாவட்டம்.

(3) திரு.எ.சரவணகுமார், செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மாவட்டம்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகவும், சுயமாகவும் பரிசீலனை செய்து 2013–2014ம் ஆண்டுக்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான காலிபணியிட மதிப்பீடு 1 (ஒன்று) என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பியுள்ள மூன்று செயற்பொறியாளர்கள் பட்டியலில் முதுநிலை அடிப்படையில் திரு.எ.குற்றாலிங்கம், செயற்பொறியாளர் என்பவர் மேற்குறிப்பிட்ட கல்வித் தகுதி மற்றும் பணித்தகுதி ஆகியவற்றை

நிறைவு செய்திருப்பதாலும், முதுநிலை வரிசையில் முதலில் இருப்பதாலும், திரு.எ.குற்றாலிங்கம், செயற்பொறியாளர் என்பவரின் பெயரை 2013–14ஆம் ஆண்டுக்கான கண்காணிப்புப் பொறியாளர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்த்து அவருக்கு கீழ்கண்டுள்ளவாறு பதவி உயர்வு மற்றும் பணிநியமனம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

| வ.எண். | பெயர், தற்போதைய பதவி மற்றும் பணிபுரியும் இடம். | பணியிடம் வழங்கப்படும் இடம். |
|---|---|---|
| 1. | திரு.எ.குற்றாலிங்கம்,<br>செயற்பொறியாளர்,<br>இராமநாதபுரம் மாவட்டம். | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம்,<br>சென்னை–9. |

5. பணிநியமனம் செய்யப்பட்ட அலுவலர் உடனடியாக புதிய பணியில் சேர அறிவுறுத்தப்பட வேண்டும் எனவும், அவர் பணியில் சேர்ந்த தேதி குறித்த விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.எ.குற்றாலிங்கம், செயற்பொறியாளர்,
இராமநாதபுரம் மாவட்டம்.
வழி : ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
திட்ட இயக்குநர், சுனாமி திட்ட செயலாக்க அலகு,
இராமநாதபுரம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல கணக்குத் துறை இயக்குநர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், இராமநாதபுரம்.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சரின் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்